தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

07.01.2013 A.M

## பொங்கல்: கரும்புக் கட்டு விலை ரூ.100 உயர்வு



இந்த ஆண்டு பொங்கல் கரும்பு கட்டுக்கு ரூ.100 விலை உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு ரூ.200-க்கு விற்ற கரும்புக்கட்டு இந்த ஆண்டு ரூ.300-க்கு விற்கப்படுகிறது.

பொங்கல் பண்டிகை என்றாலே அனைவருக்கும் நினைவுக்கு வருவது கரும்புதான். பொங்கல் பண்டிகையையொட்டி சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் (ஜனவரி 1) கரும்பு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

15 முதல் 20 கரும்புகள் உள்ள ஒரு கட்டு கடந்த ஆண்டு ரூ.200-க்கு விற்கப்பட்டது. இந்த ஆண்டு அதே அளவுள்ள கரும்பு கட்டு ரூ.300-க்கு விற்கப்படுகிறது.

மேலும் கரும்புகள் போதிய அளவு ஊட்டமில்லாமல் மெலிந்து காணப்படுகின்றன. இன்னும் நல்ல ஊட்டமுள்ள தரமான கரும்புகள் விற்பனைக்கு வரும் என வியாபாரிகள் கூறினர்.

இதுகுறித்து கோயம்பேடு மார்க்கெட் வியாபாரிகள் சங்கத் தலைவர்களில் ஒருவரான தியாகராஜன் கூறியது: இந்த ஆண்டு கரும்பு வரத்து மிகவும் குறைவாக உள்ளது. கடந்த ஆண்டு ஒரு நாளைக்கு 8 லோடு கரும்பு வந்தது. ஆனால் இந்த ஆண்டு ஒரு நாளைக்கு 2 லோடு கரும்பு மட்டுமே வருகிறது.

அதுவும் தற்போது கும்பகோணம் பகுதியில் இருந்து மட்டுமே கரும்பு லாரி லோடுகள் வருகின்றன. மின் தட்டுப்பாடு, தண்ணீர் பற்றாக்குறை, வறட்சி போன்ற காரணங்களால் கரும்பு விளைச்சல் குறைவு என விவசாயிகள் கூறுகின்றனர்.

மார்க்கெட்டுக்கு வரும் விவசாயிகளுக்கு பாதுகாப்பு வேண்டும்: தற்போது கோயம்பேடு மார்க்கெட்டில் இடைத் தரகர்கள் அதிகரித்துள்ளனர்.

மார்க்கெட்டுக்கு சம்பந்தம் இல்லாத நபர்கள் பலர் உள்ளே நுழைந்து லாரியை மடக்கி பேரம்பேசி முறையான வியாபாரிகளுக்குச் செல்லவிடாமல் விவசாயிகளை மிரட்டி குறைந்த விலைக்கு வாங்குகின்றனர். பொருளை விற்றுவிட்டு பணம் தருகிறேன் என விவசாயிகளிடம் கூறி அதிக விலைக்கு விற்றுவிட்டு பேசிய பணத்தைவிட குறைவாக விவசாயிகளுக்கு வழங்கும் நிகழ்வுகளும் இங்கு நடைபெறுகின்றன.

மேலும் கரும்பு விற்பனைக்கு முறையான இடம் இருந்தும் போக்குவரத்துக்கு இடையூறாக கண்ட இடத்தில் கரும்புகளை இறக்கி ஏலம் விடுகின்றனர்.

இதனால் மற்ற வாகனங்கள் உள்ளே வர முடியாத நிலை ஏற்படுகிறது. மேலும் விவசாயிகளிடம் பிக்பாக்கெட் அடிப்பது, வம்பிழுப்பது, தகராறு போன்ற சம்பவங்களும் நடைபெறுகின்றன.

ஏற்கெனவே பல இடையூறுகளை தாண்டி தங்களது விளை பொருள்களை எடுத்து வரும் விவசாயிகள் இதுபோன்ற பல பிரச்னைகளால் கடும் மனஉளைச்சலுக்கு ஆளாகின்றனர்.

எனவே கோயம்பேடு மார்க்கெட்டில் விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல், வியாபாரிகளுக்கும் போதிய பாதுகாப்பு வழங்க போலீஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் தியாகராஜன்.

## தீவனப் பயிர் சாகுபடி செய்ய நவீன இயந்திரம் அறிமுகம்

புரதச்சத்து நிறைந்த தீவனப் பயிர்கள் சாகுபடி செய்வதற்கான நவீன இயந்திரம் நாமக்கல்லில் ஞாயிற்றுக்கிழமை அறிமுகப்படுத்தப்பட்டது. நிலம், மண் இல்லாமலேயே இந்த இயந்திரம் மூலம், கால்நடைகளுக்குத் தேவையான தீவனப் பயிர்களை குறைந்த செலவில், குறுகிய காலத்தில் சாகுபடி செய்யலாம்.

பால் உற்பத்தி, இறைச்சிக்காக வளர்க்கப்படும் பசுக்கள், ஆடுகளுக்கு புரதம் என்பது மிக அதிகத் தேவையாக உள்ளது. இந்தப் புரதச்சத்து மண்ணில் விளையும் தீவனப் பயிர்களில் இருந்து 10 சதம் மட்டுமே கிடைப்பதுடன், அதற்கு நிலம், தண்ணீர் தேவை. வேலை ஆள்கள் என உற்பத்திச் செலவும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இதற்கு மாற்று வழியைக் காணும் வகையில், தீவனப் பயிர் சாகுபடி புதிய நவீன இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஹைட்ரோ போனிக்ஸ் என்னும் தொழில்நுட்பத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த இயந்திரம் வீடுகளில் பயன்படுத்தப்படும் குளிர்சாதனப் பெட்டி போன்ற வடிவத்தில் உள்ளது. இதில் சூரிய ஒளிக்கு இணையான வெப்பத்தை அளிக்கக்கூடிய விளக்கு பொருத்தப்பட்டுள்ளது. மேலும், குளிர்ச்சி மற்றும் ஓசோன், கார்பண்டை-ஆக்ஃஸடு, ஆக்ஸிஜன் உள்ளிட்ட வாயுக்களும் கிடைக்க தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தேவையான தண்ணீர் வசதியும் செய்யப்பட்டுள்ளது. இதில் மண் இல்லாமலேயே 7 நாள்களில் தீவனப் பயிர்களை சாகுபடி செய்ய முடியும். இதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் தீவனப் பயிர்களில் புரதத்தின் அளவு 21 சதம் இருப்பதும் தெரிய வந்துள்ளது.

இந்த இயந்திரத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் தீவனத்தை அளிப்பதன் மூலம் கால்நடைகளுக்கு 8 மாதங்களில் ஏற்படும் வளர்ச்சி, 4 மாதங்களில் கிடைக்கிறது.

தவிர, கால்நடைகளின் கொழுப்பு குறைந்து, புரதச்சத்து அதிகரிப்பதாகத் தெரிகிறது. நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையம் (கேவிகே) சார்பில், இந்த இயந்திரம் நாமக்கல் விவசாயிகளுக்கு ஞாயிற்றுக்கிழமை அறிமுகம் செய்யப்பட்டது.

இயந்திரம் குறித்து கேவிகே மண்டல திட்ட இயக்குநர் எஸ்.பிரபுகுமார் கூறியது:

தீவனப் பயிர்களை வழக்கமாக மண்ணில் உற்பத்தி செய்ய ஒரு கிலோ விதைக்கு 70 முதல் 80 லிட்டர் தண்ணீர் தேவைப்படுவதுடன், 25 செமீ உயரம் வரை தீவனப் பயிர்கள் வளர 30 நாள்களாகிறது. ஆனால், இந்த இயந்திரத்தில் தீவனப் பயிர்களை உற்பத்தி செய்ய ஒரு கிலோ விதைக்கு ஒரு லிட்டர் தண்ணீர் மட்டுமே செலவாவதுடன், 7 நாள்களில் 25 செமீ உயரத்துக்கு பயிர்கள் வளர்ந்து விடுகிறது. இதில் 21 சத புரதம் நிறைந்திருப்பதால் கால்நடைகளின் 75 சத தீவனத் தேவையும் நிறைவு பெறுகிறது.

இந்த இயந்திரம் மூலம் மக்காச்சோளம், சோளம், கம்பு, கேழ்வரகு உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யலாம். தேவையான மாற்றங்கள் செய்து கீரை வகைகளையும் உற்பத்தி செய்ய முடியும். 25 கிலோ தீவனப் பயிர் சாகுபடி செய்ய ரூ.75 ஆயிரம் விலையிலும், ஒரு டன் சாகுபடி செய்ய ரூ.15 லட்சம் விலையிலும் இயந்திரங்கள் கிடைக்கின்றன என்றார் அவர்.

இந்த நிகழ்ச்சியில் நாமக்கல் கேவிகே அலுவலர் மோகன், தார்வாடி கேவிகே அலுவலர் ஜீதேந்தரகுமார் ஹில்லி, இயந்திர விற்பனை பிரதிநிதி பி.பி.உப்பாஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## வெற்றிலை வரத்து குறைவு: விலை உயர்வு

பரமத்திவேலூர் வெற்றிலை ஏலச் சந்தைக்கு வெற்றிலை வரத்து குறைந்ததால், அதன் விலையும் திடீரென உயர்ந்தது.

பரமத்திவேலூர் காவிரி கரையோரப் பகுதிகளான பாண்டமங்கலம், வேலூர், பொத்தனூர், நன்செய் இடையாறு, பாலப்பட்டி குன்னிபாளையம், எல்லைக்காட்டுப் புதூர் மற்றும் மோகனூர் உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு விளையும் வெற்றிலைக்கு வெளி மாநிலங்களில் அதிக அளவில் வரவேற்பு இருப்பதால், இந்தப் பகுதியில் இருந்து தினம்தோறும் லாரிகள், ரயில்கள் மூலம் வெற்றிலை ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் வெள்ளை வெற்றிலை 104 கவுகளிகள் கொண்ட சுமை ஒன்று ரூ.2 ஆயித்து 500-க்கும், வெள்ளை முதியம் பயிர் வெற்றிலை மார் ரூ.400-க்கும் ஏலம் போனது.

கற்பூரி வெற்றிலை சுமை ஒன்று ரூ. 2 ஆயிரத்திற்கும், கற்பூரி முதியம் பயிர் வெற்றிலை ரூ.500-க்கும் ஏலம் போனது.

ஆனால், சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வெள்ளை வெற்றிலை ரு. 3 ஆயிரத்திற்கும், வெள்ளை முதியம் பயிர் வெற்றிலை மார் ரூ.500-க்கும் ஏலம் போனது.

கற்பூரி வெற்றிலை ரூ.2 ஆயிரத்து 500-க்கும், கற்பூரி முதியம் பயிர் வெற்றிலை ரூ.1,300-க்கும் ஏலம் போனது.

## சர்க்கரை ஆலைகளை அரைவை ஆலைகளாக்க வேண்டும்

கரும்பு விவசாயிகளுக்கும், கரும்பு ஆலைகளுக்கும் ஏற்படும் நஷ்டத்தைத் தவிர்க்க, சர்க்கரை ஆலைகளை கூலி அரைவை ஆலைகளாக மாற்ற வேண்டும் என தமிழ்நாடு கள் இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

தமிழ்நாடு கள் இயக்க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் எஸ்.ராமசாமி தலைமையில் நாமக்கல்லில் சனிக்கிழமை நடைபெற்றது. கள் இயக்க கள

ஒருங்கிணைப்பாளர் செ.நல்லசாமி, மாநில அமைப்பாளர்கள் பி.கே.ராமசாமி, இல.கதிரேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

விவசாயிகளிடம் இருந்து பெறப்படும் கரும்புகளை அரைத்து மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களாக (ஆல்கஹால், எத்னால், சர்க்கரை, மது, மின்சாரம், காகிதம், குப்பை உரம்) விவசாயிகளுக்குத் திருப்பி அளிக்கும் வகையில், தமிழகத்திலுள்ள 47 ஆலைகள் உள்பட நாட்டிலுள்ள 560 சர்க்கரை ஆலைகளையும் கூலி அரைவை ஆலைகளாக மாற்ற வேண்டும். இதனால், கரும்பு விவசாயிகளுக்கும், ஆலைகளுக்கும் ஏற்படும் நஷ்டம் தவிர்க்கப்படும். இத்தகைய நடைமுறை மாற்றத்தை மத்திய, மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும்.

பருவமழை பொய்த்ததாலும், மேட்டூர் அணைக்கு தண்ணீர் வரத்து இல்லாததாலும், குறுவை மற்றும் சம்பா சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளன. இத்தகைய பாதிப்புகளுக்கும், நெருக்கடிகளுக்கும் தற்கொலை என்பது தீர்வல்ல என்பதை விவசாயிகள் உணர வேண்டும்.

கடுமையான மின் வெட்டால் பல மாவட்டங்களில் தொழில் முடங்கியுள்ளன. திருப்பூர் உள்ளிட்ட தொழில் நகரங்களில் இறக்குமதி இயந்திரங்களைக்கூட எடைக்கு விற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்னைக்கு தீர்வு காண அரசு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வறட்சி, மின் வெட்டால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு பேரிடர் பாதிப்புக்கு சமமாகும். எனவே, தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவித்து, பேரிடர் நிவாரணம் அளிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாவட்ட அமைப்பாளர்கள் செ.கோபிநாத், ஆர்.தங்கராசு, ம.கோகுல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## எட்டயபுரத்தில் வறட்சி நிவாரண பொது மாநாடு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற

மாநாட்டுக்கு முன்னாள் எம்.எல்.ஏ. அய்யலுசாமி தலைமை வகித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் ஆர்.நல்லகண்ணு, முன்னாள் எம்.எல்.ஏ. ராஜேந்திரன், கோவில்பட்டி, விளாத்திகுளம், எட்டயபுரம், ஓட்டப்பிடாரம் வட்ட விவசாய சங்கச் செயலர்கள் பேசினர்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, எட்டயபுரம், விளாத்திகுளம், ஓட்டப்பிடாரம் வட்டப் பகுதி முழுவதையும் வறட்சிப் பகுதிகளாக அறிவிக்க வேண்டும். இப்பகுதி விவசாயிகளுக்கு ஏக்கருக்கு

ரூ.15 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும். நில வரியை தள்ளுபடி செய்ய வேண்டும். அனைத்து விவசாய கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும். விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், உழவு மற்றும் விவசாயத்துக்கு பயன்படும் டிராக்டர் போன்ற வாகனங்களை ஜப்தி செய்வதை நிறுத்த வேண்டும்.

2008-2009-ம் ஆண்டுக்கு பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு உடனடியாக இழப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டும். 2012-2013-ம் ஆண்டு கோவில்பட்டி கோட்டத்தில் வறட்சி பாதித்துள்ளதால் விவசாயிகளுக்கு தமிழ்நாடு அரசே காப்பீட்டு பிரீமியத் தொகையை செலுத்த வலியுறுத்தியும், விவசாயத் தொழிலாளர்களுக்கு வறட்சி நிவாரணப் பணியாக கால்வாய் சீரமைப்பு, குளம், குட்டை மற்றும் பாசனக் கண்மாய் ஆழப்படுத்துதல், சாலை வசதி மேம்படுத்துதல் போன்ற பணிகளுக்கான வேலைவாய்ப்பை அளிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணமூர்த்தி செய்திருந்தார்.

ஏரலில் இன்று கூட்டம்:

தூத்துக்குடி மாவட்ட தாமிரவருணி பாசன விவசாயிகள் கோரிக்கை பொது மாநாடு ஏரல் மார்க்கெட் அருகே திங்கள்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறுகிறது.

இக்கூட்டத்துக்கு தூத்துக்குடி மாவட்ட தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் ராமையா தலைமை வகிக்கிறார். ராஜா, மாலைச்செல்வம் வெள்ளைச்சாமி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். ஆர்.நல்லகண்ணு சிறப்புரையாற்றுகிறார்.

## உற்பத்தி பாதிப்பால் வெங்காயம் விலை உயர்வு

உற்பத்தி பாதிப்பால் பல்லடத்தில் வெங்காயம் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

ஆண்டுதோறும் பருவ மழைக்காலங்களில் வெங்காய உற்பத்தி பாதிக்கப்படும். இதனால், சின்ன வெங்காயம் விலை உயர்வு ஏற்படுவது வழக்கம்.

புதிய வெங்காய வரத்து துவங்கியவுடன் விலை குறையும். ஆனால், நடப்பாண்டு வெங்காய வரத்து இல்லாததால் விலை ஏறுமுகமாகவே உள்ளது.

கடந்த சீசனில் அறுவடை செய்த இருப்பு வெங்காயத்தை, நல்ல விலை கிடைத்ததால் விவசாயிகள் விற்க துவங்கினர்.

மழை பெய்திருந்தால் புதிய வெங்காயம் சந்தைக்கு வர துவங்கியிருக்கும்.

மழையின்மையால் வெங்காயம் பயிரிடும் பரப்பும், வரத்தும் குறைந்துவிட்டது.
கடந்த வாரம் மொத்த விலையாக கிலோ ரூ.40-க்கு விற்பனையானது.
இந்த வாரம் ரூ.50-ஆகவும், சில்லறை கடையில் ரூ.60-க்கும் விற்பனையாகிறது.

## கரும்பு விளைச்சல் குறைவு; விலை அதிகம்



பொங்கல் பண்டிகைக்கு இன்னும் ஒரு சில நாள்கள் உள்ள நிலையில், காஞ்சிபுரத்தில் கரும்பு விற்பனை தொடங்கியுள்ளது. விளைச்சல் குறைவால் விலை அதிகரித்துள்ளது. 20 எண்ணிக்கை கொண்ட கரும்புக் கட்டு ஒன்று ரூ.350 வரை விற்பனையாகிறது.

தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் பண்டிகை வருகிற ஜனவரி 14-ம் தேதி கொண்டாடப்பட உள்ளது. பொங்கல் திருநாளில், முக்கிய இடம் வகிப்பது கரும்பு. பொங்கல் பண்டிகையின் போது மட்டும் அதிக அளவில் விற்பனையாகும் பன்னீர் கரும்புகள் கடலூர், தஞ்சாவூர், விழுப்புரம், மதுரை, சேலம் உள்ளிட்ட மாவட்டங்களில் அதிக அளவில் விளைவிக்கப்படுகிறது. இங்கிருந்து தமிழகம் முழுவதும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை, கடலூர், தஞ்சாவூர் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் இருந்து அதிக அளவு கரும்புகள் கொள்முதல் செய்யப்படுகின்றன. குறிப்பாக காஞ்சிபுரம் பகுதியில் விற்பனையாகும் கரும்புகள் கடலூர் மாவட்டம் சிதம்பரத்தை சுற்றியுள்ள சேத்தியாத்தோப்பு, சத்திரம், பத்திக்கோட்டை, சிவந்திபுரம் பகுதிகளில் அதிக அளவில் கொள்முதல் செய்யப்படுகிறது.

பொங்கல் பண்டிகைக்கு இன்னும் 10 நாள்களே உள்ள நிலையில் காஞ்சிபுரத்தில் கரும்பு விற்பனை களை கட்டியுள்ளது. இப்போதே 20 லோடு கரும்பு வரை வந்திறங்கியுள்ளது. இக்கரும்புகள் காஞ்சிபுரம் ரயில்வே சாலை, மார்க்கெட் பகுதிகளில் சாலையோரங்களில் விற்பனைக்காக கடைவிரிக்கப்பட்டுள்ளது. ஒரு கட்டு கரும்பு ரூ.350 வரை விற்பனை

செய்யப்படுகிறது. ஒரு கட்டுக்கு 20 கரும்புகள் வரை உள்ளன. ஒரு கரும்பின் விலை அதிகபட்சமாக ரூ.30 வரை விற்பனையாகிறது.

இது குறித்து கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக கரும்பு வியாபாரம் செய்து வரும் ரகு (61) கூறியது: காஞ்சிபுரத்தை சுற்றியுள்ள பகுதிகளில் ஆலைக்கரும்புகள்தான் பயிரிடப்படுகிறது. இதனால் கடலூர், சேலம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் இருந்து நாங்கள் கொள்முதல் செய்து வருகிறோம். பெரும்பாலும் கமிஷன் அடிப்படையில்தான் கரும்பு விற்பனை செய்து வருகிறோம்.

ரூ. 100-க்கு ரூ. 10 என்ற விகிதத்தில் எங்களுக்கு கமிஷன் கிடைக்கும். கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு கரும்பு விளைச்சல் சற்று குறைவாக உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதே போல் கடந்த ஆண்டு ஒரு கட்டு கரும்பு ரூ. 250 முதல் ரூ.300 வரை விற்பனை செய்து வந்தோம். கரும்பு விளைச்சல் குறைவு காரணமாக இப்போது விலை ஏறியுள்ளது.

போகிப்பண்டிகை மற்றும் தைத்திருநாள் அன்றுதான் வியாபாரம் அதிக அளவில் நடைபெறும் என்றார் அவர்.

### விவசாயக் கடன்களை ரத்து செய்ய வேண்டும்: ஆர்.நல்லகண்ணு

விவசாயிகளின் நில வரி மற்றும் அனைத்துக் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் ஆர்.நல்லகண்ணு வலியுறுத்தினார்.

எட்டையபுரத்தில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் அவர் ஞாயிற்றுக்கிழமை கூறியதாவது:

2012ஆம் ஆண்டு தொடக்கம் முதல் முடியும்வரை பருவமழை பொய்த்துவிட்டது. தென்மேற்குப் பருவமழை போதுமானதாக இல்லை. வடகிழக்குப் பருவமழை நான்கில் ஒரு பங்கு மட்டுமே பெய்துள்ளது.

இதனால் எட்டையபுரம், விளாத்திகுளம், கோவில்பட்டி, ஓட்டப்பிடாரம் ஆகிய வட்டங்களில் உள்ள கண்மாய்களில் தண்ணீரின்றி விவசாயப் பயிர்கள் வாடிப் போய்விட்டன. எனவே, இந்தப் பகுதிகளை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும். வறட்சி நிவாரணமாக ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும்.

விவசாயக் கடன்களை அறவே ரத்து செய்ய வேண்டும்.

இழப்பீட்டுத் தொகையை கணக்கெடுக்கும்போது, ஒவ்வொரு விவசாயியின் நிலத்துக்கும் சென்று முறையாகக் கணக்கிட வேண்டுமே தவிர, பிர்கா வாரியாக நிவாரணத் தொகை வழங்குதல் கூடாது.

காவிரி டெல்டா பகுதி விவசாயிகளுக்கு அரசு அறிவித்துள்ள சலுகைகள் அனைத்தையும் இப்பகுதி விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும்.

வைப்பாற்றுப் படுகைகளில் ஆற்றுமணல் விதிமுறைகளை மீறி மணல் அள்ளப்பட்டு வருகிறது. நிலங்களில் உள்ள மணலும் அள்ளப்படுவதால், நிலத்தடி நீர் குறைவதோடு விவசாயம் முற்றிலும் பாதிக்கப்படுகிறது. கடல்நீரும் உள்வாங்கும் நிலை ஏற்படுகிறது. எனவே, ஆற்றங்கரையோரம் மற்றும் நிலங்களில் மணல் அள்ளுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றார் அவர்.

06th jan 2013

## இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் நாளை

ராமநாதபுரம் ஊரக வளர்ச்சித் துறை இல்லத்தில் ஜன.7 ஆம் தேதி காலை நடைபெறும் கருத்தரங்கிற்கு கிரியேட் அறக்கட்டளைத் தலைவர் பேராசிரியர் பி.துரைசிங்கம் தலைமை வகிக்கிறார். ஆட்சியர் க.நந்தகுமார் கருத்தரங்கை துவக்கி வைத்து பேசுகிறார்.

இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ.நம்மாழ்வார், உணவுப் பாதுகாப்பும் இயற்கை வேளாண்மையும் என்ற தலைப்பில் பேசுகிறார். ஏற்பாடுகளை கிரியேட் அறக்கட்டளையினர் செய்து வருகின்றனர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

07.01.2013 A.M

## ரயிலில் பால் போக்குவரத்திற்கு சேவை வரியில் இருந்து விலக்கு



புதுடில்லி:ரயிலில் மேற்கொள்ளப்படும் பால் போக்குவரத்திற்கு, சேவை வரி கிடையாது என, மத்திய நிதி அமைச்சகம் தெளிவுபடுத்தி உள்ளது.அது போன்று, சரக்கு கப்பல் வாயிலான பால் போக்குவரத்திற்கும், சேவை வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டு உள்ளது.கடந்த ஆண்டு ஜூன் மாதம், பல்வேறு உணவுப் பொருட்களின் போக்குவரத்திற்கு, சேவை வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

இதன்படி, மது வகைகள் நீங்கலாக, ரயில் அல்லது சரக்கு கப்பலில் கொண்டு செல்லப்படும் தேயிலை, காபி, வெல்லம், மாவு, பால் பொருட்கள், உப்பு, சமையல் எண்ணெய் உள்ளிட்ட பொருட்களுக்கு சேவை வரி பொருந்தாது.இந்த பட்டியலில், பால் போக்குவரத்து இடம் பெறுமா என, ரயில்வே கேள்வி எழுப்பியது.இதை தொடர்ந்து, மத்திய கலால் மற்றும் சுங்கத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், ரயில் அல்லது கப்பலில், பால் போக்குவரத்திற்கு சேவை வரி வசூலிக்கக்கூடாது என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வறட்சியை விரும்பும் மஞ்சள் விவசாயிகள்



ஈரோடு:"வறட்சி நீடித்தால், மஞ்சள் விலை, வீழ்ச்சியில் இருந்து எழுச்சி காணும்' என, ஈரோடு மஞ்சள் வியாபாரிகள் தெரிவித்தனர்.மஞ்சள் உற்பத்தியில் இந்தியா முன்னணி நாடாகத் திகழ்கிறது. இந்தியாவில் ஆண்டுதோறும், 185.32 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில், 701.66 லட்சம் டன் மஞ்சள் உற்பத்தியாகிறது.தமிழகத்தில் ஆண்டுதோறும், 33 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில், 158.64 லட்சம் டன் மஞ்சள் உற்பத்தியாகிறது.

தமிழகத்தில் மற்ற மாவட்டங்களை காட்டிலும், ஈரோடு மாவட்டம் மஞ்சள் உற்பத்தியில் முன்னணி மாவட்டமாக திகழ்கிறது.ஈரோடு மாவட்டத்தில் இருந்து, ஈரோடு மஞ்சள் சந்தைக்கு, 60 சதவீத மஞ்சளும், கர்நாடகா, திருவண்ணாமலை, சேலம், தர்மபுரி, வேலூர் போன்ற பகுதிகளில் இருந்து, 40 சதவீத மஞ்சளும் வருகிறது.ஈரோடு மாவட்டத்தில் மைசூரு சம்பா, 8ம் நம்பர், 10ம் நம்பர் உள்ளிட்ட ரகங்கள் அதிகளவில் பயிரிடப்படுவது வழக்கம்.

எட்டாம் நம்பர் மஞ்சள் டிசம்பர் மாதத்தில் அறுவடை பணி துவங்கி, ஜனவரி மாதத்தில் சந்தைக்கு வரும்.கர்நாடகா, சேலம், ஆத்தூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஓசூர், திருவண்ணாமலை, வேலூர் பகுதியில் இருந்து, வழக்கமாக பிப்ரவரி, 15ம் தேதிக்கு மேல் புதிய மஞ்சள் வரும். மைசூரு சம்பா, 10ம் நம்பர் ஆகிய ரகங்களின் அறுவடை, பிப்ரவரி, மார்ச் மாதத்தில் நடைபெறும்.

கடந்த 2011ம் ஆண்டில், மஞ்சள் விலை வரலாறு காணாத வகையில், 13 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையானதால், தமிழகத்தில் மஞ்சள் சாகுபடியின் பரப்பளவு அதிகரித்தது.மஞ்சள் வரத்து அதிகரித்ததால், அதன் விலை வீழ்ச்சி கண்டது.கடந்த ஆண்டு, பருவமழை பொய்த்ததால், தமிழகம் முழுவதும் வறட்சி நிலவுகிறது. இதனால், 30 சதவீத அளவிற்கு மஞ்சள் சாகுபடி குறைந்துள்ளது.இதனால், நடப்பாண்டில், மஞ்சள் விலை உயரும் என்ற நம்பிக்கையில், மஞ்சளை அதிகளவில் வியாபாரிகள் இருப்பு வைத்துள்ளனர்.

## கரும்பு விளைச்சல் குறைவால் வெல்லம் உற்பத்தி பாதிப்பு?



பழநி:தமிழகத்தில், வடகிழக்கு பருவமழை பொய்த்துவிட்டதால், நெல், மக்காசோளத்தை தொடர்ந்து, கரும்பு விவசாயத்திற்கும் தண்ணீர் இல்லாமல், பாதியில் அறுவடை செய்கின்றனர். இதனால் ஆலைகளில், வெல்லம் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

வேடசந்தூர்:திண்டுக்கல் மாவட்டத்தில் பழநி, வேடசந்தூர். ஒட்டன்சத்திரம், கோவை மாவட்டத்தில், உடுமலைபேட்டை, தாராபுரம் பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட வெல்லம் காய்ச்சும் (உற்பத்தி) ஆலைகள் உள்ளன. இவர்கள் நன்கு விளைந்த கரும்பில் சாறெடுத்து, சுண்ணாம்பு (கெட்டி தன்மைக்கும்), மட்டிகிளிங் பவுடர் (அழுக்கி நீக்கியாக) சிறிதளவு கலந்து பாகுவாக காய்ச்சி, அச்சுவார்க்கின்றனர். மொத்தமாக நாள் ஒன்றுக்கு, 30 சிப்பம் (ஒரு சிப்பம்=30 கிலோ) வரை வெல்லம் தயார் செய்கின்றனர்.

போதிய மழை இல்லாததால், கரும்பு பயிரிட்டுள்ள விவசாயிகள், பாதி வளர்ந்த நிலையில், இளங்கரும்பாக அறுவடை செய்து, வெல்ல ஆலைகளில் விற்பனை செய்து வருகின்றனர்.ஆறு சிப்பம் வெல்லம் தயாரிக்க, 1.50 டன் கரும்பு தேவைப்படும். அதே அளவு பாதியில் அறுவடை செய்யப்பட்ட இளங்கரும்பை, டன் ஒன்றுக்கு, 1,800 ரூபாய் முதல் 2,000 ரூபாய் வரை வாங்கி, சாறெடுத்து, பாகு காய்ச்சும் போது, நான்கு சிப்பம் மட்டுமே கிடைக்கிறது. இதனால், நாள் ஒன்றுக்கு அதிகபட்சமாக, 20 சிப்பம் வெல்லம் உற்பத்தி செய்யப்படுகிறது. அதுவும் தரம் இல்லாத நிறம் குறைந்த (கருப்பாக) வெல்லமாக உள்ளது.

பொங்கல்:இவ்வகை வெல்லத்திற்கு, சந்தையில் மிக குறைந்த விலையே மதிப்பிடப்படுகிறது. வெல்ல ஆலைகளுக்கு போதிய கரும்பு கிடைக்காததால், பல ஆலைகள் உற்பத்தியை நிறுத்தியுள்ளன. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, வெல்லத்தின் தேவை அதிகரித்துள்ள போதிலும், உற்பத்தி செய்ய முடியாமல் வெல்லம் காய்ச்சும் ஆலை உரிமையாளர்கள், தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால், சந்தையில் வெல்லத்தின் விலை உயர

வாய்ப்புள்ளது.

நெய்க்காரப்பட்டி வெல்ல ஆலை உரிமையாளர் முனியாண்டி கூறியதாவது:வெல்லத்தை அருகில் உள்ள புரோக்கர்களிடம் சிப்பங்களாக வழங்குகிறோம். அவர்கள் நிர்ணயம் செய்யும் விலையிலிருந்து, ஏலம் கேட்டு, வெளியூர் மொத்த வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். சேலம், தஞ்சாவூர், திருச்சி உட்பட பல மாவட்டங்களுக்கும், கேரளா, கர்நாடகா, ஆந்திரா போன்ற வெளி மாநிலங்களுக்கும் அனுப்புகின்றனர்.போதிய கரும்பு கிடைக்காததால், வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் மட்டுமே வெல்லம் காய்ச்சுகிறோம். பொங்கல் பண்டிகைக்கு தேவை அதிகரித்தும், தயார் செய்ய முடியாத நிலையில் உள்ளோம்.இவ்வாறு அவர் கூறினார்.

## புத்தாண்டில் சரிவை சந்தித்த ஓசூர் ரோஜா



ஓசூர்:சர்வதேச சந்தைகளில் வரவேற்பு இல்லாததால், புத்தாண்டு தினத்தை ஒட்டி, வெளிநாடுகளுக்கு, ஓசூர் ரோஜா மலர்கள் ஏற்றுமதியாகவில்லை.கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது, இந்த புத்தாண்டில் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்ததால், ரோஜா விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர்.

மண்வளம்:கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் தாலுகாவில், மலர் சாகுபடிக்கு தகுந்த நல்ல மண் வளம், குளிர்ந்த காலநிலை காணப்படுகிறது. இதை பயன்படுத்தி மலர் விவசாயிகள், 5,000 ஏக்கரில் ஆண்டு முழுவதும் திறந்தவெளி மற்றும் பசுமை கிடங்கு முறையில், ரோஜா மலர் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.கடந்த காலத்தில் திறந்த வெளியில் சாகுபடி செய்த ரோஜா மலர்கள் மட்டும் உள்ளூர் சந்தைகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்பட்டன.பசுமை கிடங்குகளில் உற்பத்தியாகும் தாஜ்மகால், கிரான்ட் கலா, பஸ்ட் ரெட், ரெட் உள்ளிட்ட, 40 வகை ரோஜா மலர்கள், முழுக்க முழுக்க வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியானது.

குறிப்பாக காதலர் தினம், புத்தாண்டு, கிறிஸ்துமஸ், அன்னையர் தினம் உள்ளிட்ட

விசேஷங்களுக்கு, ஓசூரில் இருந்து ஆண்டு முழுவதும், 100 கோடி ரோஜா மலர் ஏற்றுமதியானது.ஆனால், கடந்த இரு ஆண்டுகளாக, போதிய பருவ மழையில்லாமல் வறட்சி, தொடர் மின் தடையால், பறித்த பூக்களை குளிர்பதன கிடங்குகளில் வைக்க முடியாமல், கொடி கட்டி பறந்த ரோஜா விவசாயம் நலிவடையத் துவங்கியது.

இதனால், தரமில்லாத மலர் உற்பத்தியால், ஓசூர் ரோஜா மலர்களுக்கு, சர்வதேச மலர் சந்தைகளில் வரவேற்பு குறையத் துவங்கியது.விவசாயிகள் தற்போது மதுரை, சென்னை, கோவை, டில்லி, மும்பை, பெங்களூரு உள்ளிட்ட நகரங்களை குறி வைத்து, பசுமை கிடங்குகளில் ரோஜா சாகுபடி செய்தனர்.

கடந்த ஆண்டு படிப்படியாக வெளிநாட்டு ஏற்றுமதி வீழ்ச்சிஅடைந்து, புத்தாண்டு கொண்டாட்டத்துக்கு வெளிநாடுகளுக்கு முற்றிலும் ஓசூர் ரோஜா மலர்கள் ஏற்றுமதியாகவில்லை.மேலும், புத்தாண்டில் உள்ளூர் சந்தைகளிலும் ஏற்றுமதி ரக ரோஜா மலர்கள் விலை வீழ்ச்சியடைந்தது.

கடந்தாண்டு புத்தாண்டில், உள்நாட்டு சந்தைகளில், 20 மலர்கள் கொண்ட ஒரு கொத்து மலர்கள், 180 ரூபாய் வரை விற்பனையானது. நடப்பாண்டு ஒரு கொத்து மலர்கள் விலை, 90 ரூபாய் வரை வீழ்ச்சி அடைந்தது.

வறட்சி:பேரிகையை சேர்ந்த மலர் விவசாயி சிவா கூறியதாவது:வறட்சி, மின் தடையால் தரமற்ற மலர்கள் உற்பத்தியாகின்றன.இந்த மலர்கள், வெளிநாட்டு சந்தைகளில் வரவேற்பு குறைந்து, அடிமாட்டு விலைக்கு கேட்கின்றனர். அதனால், ஏற்றுமதி செய்தால் நஷ்டம் ஏற்படும் என்பதால், நடப்பாண்டு புத்தாண்டு அன்று ஏற்றுமதியாகவில்லை.

அரசு, ஓசூர் தாலுகாவில் வரவேற்பை பெற்ற ரோஜா விவசாயத்தை மேம்படுத்த, தனி கவனம் செலுத்த வேண்டும். இல்லையென்றால், ரோஜா விவசாயம் அழிந்து விடும். இவ்வாறு சிவா கூறினார்.

## வேளாண் அதிகாரி தகவல் மானியத்தில் தெளிப்பு நீர் உபகரணம் வழங்கல்

நாமக்கல்: "ஐசோபாம் எண்ணெய் வித்து திட்டத்தின் கீழ், 50 சதவீதம் மானிய விலையில் தெளிப்பு நீர் உபகரணம் வழங்கப்படும்' என, கபிலர்மலை வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

ஐசோபாம் எண்ணெய்வித்து திட்டத்தின் கீழ், 50 சதவீதம் மானியத்தில், தெளிப்பு நீர் உபகரணம்,

விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எண்ணெய்வித்து பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் (தென்னை தவிர்த்து), இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம்.

அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் இருந்து, உரிய ஆவணங்களின் அடிப்படையில், 600 அடி நீளம் ஹெச்.டி.பி., பைப்புகளும், நீர்தூவுவான் ஐந்து எண்களும் சேர்த்து, ஒரு யூனிட் வழங்கப்படும். வறட்சி காலத்தில், தண்ணீர் சிக்கனத்துக்கும், பயிர்களை வறட்சியின் பிடியில் இருந்து காப்பதற்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு எடுத்துச் சென்று சுலபமக பொருத்தி நீர் கசிவின்றி பயிர்களுக்கு தெளிக்கலாம். ஒரு யூனிட்டின் முழு விலையில், 7,500 ரூபாய் மானியம் போக, மீதி தொகை செலுத்தி, உபகரணத்தை பெற்றுக்கொள்ளலாம். இச்சலுகை ஆதி திராவிட விவசாயிகளுக்கும், இதர விவசாயிகளுக்கும் கிடைக்கும்.

நில உடமைக்கான கம்ப்யூட்டர் சிட்டா, ரேஷன்கார்டு ஜெராக்ஸ், ஃபோட்டோ, நிலத்தின் வரைபட உண்மை நகல் ஆகிய விபரங்களுடன், விவசாயிகள், வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் விண்ணப்பிக்கலாம்.

முன்னுரிமை அடிப்படையிலும், தகுதியின் பேரில் மானியம் அனுமதித்து வழங்கப்படும். மேலும் விபரங்களுக்கு, வட்டார உதவி வேளாண் அலுவலர் அல்லது வேளாண் விரிவாக்க மையத்தையோ நேரில் அணுகி தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மரம் மற்றும் மூலிகை வளர்ப்போர் சங்க நிர்வாகி ஆலோசனை கூட்டம்

நாமக்கல்: மாவட்ட மரம் மற்றும் மூலிகை வளர்ப்போர் சங்கத்தின், நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம், நாமக்கல்லில் நடந்தது.

சங்கத் தலைவர் சத்தியமூர்த்தி தலைமை வகித்தார். செயலாளர் தில்லை சிவக்குமார் வரவேற்றார். இயற்கை விவசாயிகள் சேதுராமன், முரளிதரன், உழவர் விவாதக்குழுத் தலைவர் கந்தசாமி ஆகியோர் விளக்கிப் பேசினர்.

கூட்டத்தில், காலத்தில் பெய்யக்கூடிய பருவமழை பொய்த்து போனதால், நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்துபோனது. அதனால், ஆடு, மாடு போன்ற கால்நடைகளுக்கு தீவனம் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அதனால், விவசாயிகள், தங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதுபோன்ற சூழ்நிலையை கருத்தில் கொண்டு, விவசாயிகள் தங்கள் காடுகளில் தீவனம்,

பழவகைகள், டிம்பர் போன்ற மரங்களை நட்டு முறையாக பராமரித்து, வருமானம் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், ஒரு ஏக்கரில், 33 சதவீதம் மரங்களை நட்டு பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல், விவசாயிகளுக்கு போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், விவசாய கண்காட்சி நடத்தவது என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், இயற்கை ஆர்வலர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## சர்க்கரை விலையில் திடீர் சரிவு ஸ்டாக் வைத்த வியாபாரிகள் பீதி

சேலம்: கச்சா சர்க்கரை வரத்து அதகரிப்பு காரணமாக, தமிழகத்தில் சர்க்கரை விலையில் திடீர் சரிவு ஏற்பட்டது. இந்த சரிவு ஸ்டாக் வைத்திருந்த வியாபாரிகள் மத்தியில் கடும் பீதியை ஏற்படுத்தி உள்ளது.

சர்க்கரை விலை குவிண்டாலுக்கு, 200 ரூபாய் வரை சரிவு ஏற்பட்டு, 3,600 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. விலை மேலும் சரிவு ஏற்படும், என செய்திகள் பரவி வருவதால், ஸ்டாக் வைத்துள்ள வியாபாரிகள் கலக்கமடைந்துள்ளனர்.

கடந்த, 2009 ஜனவரி மாதத்தில் உயர துவங்கிய சர்க்கரை விலை, தொடர்ந்து அதிகரித்து, 2012, ஜனவரியில் அதிகபட்சமாக கிலோ, 48 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. சர்க்கரை விலையை கட்டுப்படுத்த, மத்திய அரசு இந்தோனேசியாவில் இருந்து, அதிக அளவில் கச்சா சர்க்கரை இறக்குமதி செய்ததால், சர்க்கரை விலை கிலோ, 40 ரூபாயாக குறைந்தது.

வடமாநிலங்களில் இருந்து, தமிழகத்துக்கு நாள் ஒன்றுக்கு, 500 டன் சர்க்கரை விற்பனைக்கு வந்து கொண்டுள்ளது. இந்நிலையில், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கச்சா சர்க்கரை சுத்திகரிப்பு செய்யப்பட்டு, விற்பனைக்கு வரத் துவங்கி உள்ளது.

இந்த சர்க்கரை வரவால், மஹாராஷ்டிரா, உத்திரபிரதேசம் உள்ளிட்ட வட மாநிலங்களில் இருந்து, தமிழகத்துக்கு அதிகப்படியான சர்க்கரை விற்பனைக்கு வரத் துவங்கி உள்ளது.

சர்க்கரை விலை, பிப்ரவரி முதல் வாரத்தில் கிலோ, 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும், என வியாபாரிகள் எதிர்பார்க்கின்றனர். வரத்து அதிகரித்துள்ள நிலையில் வியாபாரிகள் சின்டிகேட் அமைத்துக் கொண்டு, சில்லறை வியாபாரத்தில் விலை குறைப்பு செய்யாமல் உள்ளனர். மொத்த சர்க்கரை மார்க்கெட்டில் குவிண்டால், 3,600 ரூபாய்க்கும், சில்லறை விலையில் கிலோ, 37 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

சேலம், செவ்வாய்ப்பேட்டையை சேர்ந்த சர்க்கரை மொத்த வியாபாரி சங்கரராமன் கூறியதாவது:

மத்திய அரசு, சர்க்கரை விலையை குறைக்கும் வகையில், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்த கச்சா சர்க்கரை, விற்பனைக்கு வருகிறது. நடப்பாண்டு சர்க்கரை உற்பத்தியும் அதிகரித்துள்ளது. இதனால், வட மாநிலங்களில் ஸ்டாக் வைக்கப்பட்டு இருந்த சர்க்கரையை, வியாபாரிகள் தமிழகத்துக்கு அதிக அளவில் விற்பனைக்கு அனுப்புகின்றனர்.

தமிழகத்தில், பொங்கல் பண்டிகை காரணமாக சர்க்கரை, வெல்லத்தின் உற்பத்தியில் சுறுசுறுப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், கடந்த பத்து நாட்களில், சர்க்கரை மார்க்கெட்டில் மந்த நிலை காணப்பட்டது.

இந்நிலையில், மொத்த விலையில் குவிண்டாலுக்கு, 200 ரூபாயும், சில்லறை விலையில், கிலோவுக்கு இரண்டு ரூபாய் வரை சரிவு ஏற்பட்டுள்ளது. வரத்து அதிகரித்து வருவதால், விலையில் மேலும் சரிவு ஏற்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## விவசாய கருவிகள் வழங்கும் விழா

திருப்போரூர்:திருப்போரூரில் வேளாண்மைத் துறை சார்பில், விவசாயக் கருவிகள் வழங்கும் விழா நடந்தது.

சென்னை நந்தனம் வேளாண்மைத்துறை அலுவலகம் சார்பில் நடந்த விழாவிற்கு, காஞ்சிபுரம் மாவட்ட பொறியியல் துறை செயற்பொறியாளர் சுப்ரமணியம் தலைமை தாங்கினார்.

நந்தனம் உபகோட்ட உதவிப் பொறியாளர் ரங்கநாதன், செயற்பொறியாளர் ஞானமூர்த்தி, ரகுநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் மனோகரன் கலந்துகொண்டு, 15 பேருக்கு பவர்டில்லர் இயந்திரம், இருவருக்கு மருந்து தெளிப்பான், ஒருவருக்கு மரம் அறுக்கும் கருவி, என, 26 லட்சம் ரூபாய் மதிப்புள்ள விவசாயக் கருவிகளை வழங்கினார்.

## தேயிலை ஏலத்தில் ஏற்றம்வர்த்தகர்கள் சங்கம் மகிழ்ச்சி

குன்னூர்:குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்கத்தின் நடப்பாண்டின் முதல் ஏலத்தில் தேயிலைக்கு 2 ரூபாய் ஏற்றம் காணப்பட்டது. குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்க ஏல மையத்தில், நடப்பாண்டின் முதல் ஏலம் கடந்த 3 மற்றும் 4ம் தேதிகளில் நடந்தது. ஏலத்துக்கு மொத்தம் 15.78 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது.

இதில் 11.47 லட்சம் கிலோ இலை ரகமும், 4.31 லட்சம் கிலோ டஸ்ட் ரகமும் அடங்கும். மொத்தம் 15.78 லட்சம் கிலோ தேயிலை தூளில் 95 சதவீதம் விற்பனையானது. கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய்

ஏற்றம் காணப்பட்டது. சி.டி.சி., ரகத்துக்கு அதிகபட்சமாக ஹோம்டேல் எஸ்டேட் தேயிலை தூளுக்கு 183 ரூபாயும், ஆர்தோடக்ஸ் ரகத்துக்கு அதிகபட்சமாக ஹைபீல்டு எஸ்டேட் தேயிலை தூளுக்கு 270 ரூபாய் விலை கிடைத்தது. சராசரியாக சாதாரண ரகத்துக்கு 89 ரூபாயிலிருந்து 92 ரூபாய் வரையிலும், உயர் ரகம் கிலோ ஒன்றுக்கு 110 ரூபாய் முதல் 150 ரூபாய் விலை கிடைத்தது. டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகத்துக்கு 81 ரூபாயிலிருந்து 92 ரூபாய் வரையிலும், உயர் ரகத்துக்கு 110 ரூபாய் முதல் 145 ரூபாய் வரை விலை கிடைத்தது. வரும் 10 மற்றும் 11ம் தேதிகளில் நடக்கும் இரண்டாம் ஏலத்துக்கு மொத்தம் 19 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது. இதில், இலை ரகம் 13.58 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 5.42 லட்சம் கிலோவும் அடங்கும்.

## நெல் அறுவடையில் இயந்திரங்கள்: கால்நடை தீவன தட்டுப்பாடு அபாயம்

ஈரோடு:காலிங்கராயன் பாசன பகுதி விளை நிலங்களில் நெல் அறுவடைக்கு ஆட்கள் கிடைக்காததால், இயந்திரங்கள் கொண்டு அறுவடை பணிகள் செய்து வருகின்றனர். இதனால், அறுவடைக்குப்பின் மாடுகளுக்கு, தீவனமாகும் வைக்கோல் வீணாகிறது.

ஈரோடு மாவட்டத்தில், காலிங்கராயன் வாய்க்கால் மூலமாக, 18 ஆயிரம் ஹெக்டேர் விவசாய நிலங்கள் பாசன வசதியை பெறுகின்றன. நெல், மஞ்சள், வாழை, கரும்பு ஆகியவை அதிக அளவில் பயிரிடப்படுகிறது.

ஆண்டுதோறும் ஜூன், 12ம் தேதி காலிங்கராயனில் தண்ணீர் திறக்கப்படுகிறது. கடந்தாண்டு போதிய மழையின்றி, அணைகளில் தண்ணீர் வற்றியதால், காலிங்கராயன் விவசாயிகள் ஒரு போக சம்பா சாகுபடியை தவிர்த்தனர். ஈரோடு அடுத்த சாவடிப்பாளையம், காங்கேயம்பாளையம் சுற்றுவட்டார பகுதிகளில், விவசாயிகள் தங்கள் நிலத்தில் நன்கு வளர்ந்த நெல்லை அறுவடை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

சில ஆண்டாக, இரண்டு ஏக்கர் வரையிலும் நெல் பயிரிட்டவர்கள், கூலியாட்களை வைத்து அறுவடை மேற்கொண்டனர். நடப்பாண்டு அரை ஏக்கர் நிலத்தில், நெல் பயிரிட்டவர்கள் கூட, கூலியாட்கள் கிடைக்காமல், இயந்திரம் மூலமாக அறுவடையில் ஈடுபட்டுள்ளனர்.

இதுபற்றி விவசாயி சுந்தரகவுண்டர் கூறுகையில்,""மழையின்மை, தண்ணீர் பற்றாக்குறையால், வாழை மற்றும் கரும்பு பயிரிட்டனர். கிணற்று பாசனத்தை நம்பி, நெல் பயிரிட்டோம். சுற்றுவட்டார பகுதியில் அறுவடை துவங்கியுள்ளது. நூறுநாள் வேலை திட்டத்தால், விவசாயத்துக்கு கூலி ஆட்கள் கிடைப்பதில்லை.

அதிகளவில் நிலம் வைத்திருப்போர், குடும்பத்துடன் கூலியாட்களை நியமித்து கொள்கின்றனர். ஆனால், சிறு விவசாயிகளுக்கு, கூலியாட்களை நியமிக்க வழியில்லாததால், நடப்பாண்டு இயந்திரம் மூலமாக அறுவடை செய்வதால், வேலைகள் விரைவாக முடிகிறது. ஆனால், அறுவடைக்குபின் கிடைக்கும் வைக்கோல் பில்லை, மாடுகளுக்கு தீவனமாக கொடுக்க முடியாது. மெத்தை மற்றும் கீல் தயாரிக்குள் தொழிற்சாலைக்கு பயன்படுத்தி கொள்ளலாம்," என்றார்.
100 நாள் வேலைத்திட்டப்பணியை விவசாய தொழிலிலும் பயன்படுத்தலாம் என மத்திய, மாநில அரசுகள் திட்டம் வகுத்தபோதும், முழுமையாக அவை செயல்படுத்தப் படாமல், விவசாயம் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகிறது.

**மழையில்லாமல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கவேண்டும்**

கோவில்பட்டி:மழையில்லாமல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கவேண்டும் என சிபிஐ தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் நல்லகண்ணு வலியுறுத்தியுள்ளார். கோவில்பட்டி அருகேயுள்ள எட்டயபுரத்தில் கோவில்பட்டி கோட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு நிவாரணமாக ஏக்கருக்கு 15 ஆயிரம் வழங்க வேண்டுமென்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சிபிஐ சார்பில் பொதுக்கூட்டம் நடந்தது. எட்டயபுரம் நடுவிற்பட்டி பழைய தியேட்டர் அருகில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொள்ள சிபிஐ தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் நல்லகண்ணு வந்திருந்தார். முன்னதாக அவர் பத்திரிக்கையாளர்களை சந்தித்தார். எட்டயபுரம் தூத்துக்குடி ரோட்டிலுள்ள சிபிஐ கட்சி அலுவலகத்தில் நடந்த பத்திரிக்கையாளர் சந்திப்பில் அவர் கூறியதாவது, கோவில்பட்டி கோட்டத்திலுள்ள கோவில்பட்டி, எட்டயபுரம், விளாத்திகுளம் மற்றும் ஓட்டப்பிடாரம் தாலுகாக்களில் மழையை நம்பி மானாவாரி விவசாயிகள் பயிர் செய்தனர். ஆனால் மழை பொய்த்துப் போய் பயிர்கள் சேதமடைந்து இருப்பதால் விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். மேலும் காவிரி டெல்டா பகுதி விவசாயிகளுக்கு அறிவித்து இருப்பது போல், இப்பகுதி விவசாயிகளுக்கும் நிவாரண நிதி வழங்க வேண்டும். தவிர விவசாய கடன்களை முற்றிலும் தள்ளுபடி செய்யவும், கடனை கட்டாத விவசாயிகளின் சொத்துக்களை ஜப்தி நடவடிக்கைகளை தவிர்க்கவும் வேண்டும். தமிழக அரசு பொங்கலுக்கு அறிவித்துள்ள சலுகைகள் வரவேற்கத்தக்கது. வைப்பாற்றில் மணல் எடுப்பதுடன், அருகேயுள்ள நிலங்களிலும் சேர்த்து மணல் எடுக்கப்படுவதால் கடல்நீர் உள்வாங்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது. மேலும் இப்பகுதியில் நிலத்தடிநீர் அற்றுப் போகும் நிலையும் ஏற்பட்டுள்ளது. எட்டயபுரம் ராஜாப்பட்டி அருகே வல்லநத்தம் கிராமத்தினர் குடிநீர் கிடைக்காததால் ஊரை காலி

செய்து விட்டனர். பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் வழங்கும் தொகையை சீராக வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதையடுத்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் பதிலளித்ததாவது, காவிரி நதிநீர் ஆணைய உத்தரவை அரசிதழில் வெளியிடாததற்கு காரணம், கர்நாடகத்தில் தேர்தல் வருவதால் தமிழகம் வஞ்சிக்கப்படுகிறது.
தமிழகத்தில் பாலியல் கொடுமைக்கான விசாரணைக்கு சிறப்பு நீதிமன்றங்கள் கொண்டு வருவது வரவேற்கத்தக்கது. சில்லறை வணிகத்தில் அந்நிய நேரடி முதலீடு விவகாரத்தில் பா.ஜ., காங்., ஆகிய இரண்டு கட்சிகளும் ஒரே கொள்கையுடனேயே உள்ளன. ஆகவே தேர்தல் நேரத்தில் கட்சி மேலிடத்தில் கூடி முடிவு செய்து சிபிஐ தேர்தலில் போட்டியிடும். தற்போது எட்டயபுரத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு தமிழக முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும். அதன் மீது நடவடிக்கை எதுவும் இல்லையெனில் கட்சியில் முடிவெடுக்கப்பட்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமென சிபிஐ தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் நல்லகண்ணு தெரிவித்தார். அப்போது முன்னாள் எம்எல்ஏ அய்யலுசாமி, விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் பாலமுருகன், முன்னாள் மாவட்ட செயலாளர் சேது, தாலுகாக்குழு செயலாளர் நல்லையா, நகரக்குழு தலைவர் கிருஷ்ணமூர்த்தி உள்பட பலர் இருந்தனர்.

**வெற்றிலை வியாபாரிக்கு பொதுநல சேவை விருது வழங்கல்**

சிவகிரி:சிவகிரி அடுத்துள்ள தேவதானத்தை சேர்ந்த வெற்றிலை வியாபாரிக்கு பொது நல சேவை விருது வழங்கப்பட்டுள்ளது.

பஞ்சாப் மாநிலம் லூதியனாவில் டாடா நிறுவனங்கள் சார்பில் நேரு சித்காண்ட் கேன்டர் டிரஸ்ட் இயங்கி வருகிறது. இந்த அமைப்பு பொதுநல சேவை செய்வோர்களை தேர்வு செய்து அவர்களுக்கு சாத்பவுல் மிட்டல் விருது வழங்கி கவுரவிக்கிறது.

இந்த ஆண்டு பொதுநல சேவைக்கு சிவகிரி அடுத்த தேவதானத்தைச் சேர்ந்த சைக்கிளில் வெற்றிலை வியாபாரம் செய்யும் தலைமலை (44) என்பவர் இந்த விருதுக்கு தேர்வு செய்யப்பட்டார்.

லூதியானாவில் நடந்த விழாவில் டில்லி முதல்வர் ஷீலாதீட்சித் " சாத்பவுல் விருது'க்கு தேர்வு

செய்யப்பட்ட தலைமலைக்கு விருதுக்கான
பதக்கம் மற்றும் ரொக்கம் ரூ.50 ஆயிரம் வழங்கி பாராட்டினார்.

விருது பெற்ற தலைமலை பதினைந்து ஆண்டுகளாக பொது இடங்களில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மரக் கன்றுகளை நட்டுள்ளார். இவரை தேவிபட்டணம் வியாபாரிகள் சங்க நிர்வாகிகள், பொதுமக்கள்,பிரமுகர்கள் பாராட்டி, வாழ்த்து தெரிவித்தனர்.

## வடக்கு பச்சையாறு அணையிலிருந்து விவசாயத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டும் *கலெக்டருக்கு எம்எல்ஏ., கோரிக்கை

நான்குநேரி:வடக்கு பச்சையாறு அணையிலிருந்து விவசாயத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டும் என்று நான்குநேரி எம்எல்ஏ., நாராயணன் கோரிக்கை விடுத்துள்ளார்.
இது குறித்து நெல்லை கலெக்டருக்கு அவர் அனுப்பியுள்ள மனுவில் தெரிவித்திருப்பதாவது:
களக்காடு யூனியன் பத்மநேரி பஞ்.,சில் கீழ வடக்கரை, மேல வடக்கரை உட்பட 15 கிராம மக்களின் வாழ்வாதாரமாக விளங்கும் பாம்பன்குளம் மற்றும் பூலான்குளத்திற்கு மடத்து கால்வாய் மூலம் வடக்கு பச்சையாறு அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும்.
இதனால் அப்பகுதி மக்களின் வாழ்வாதாரம் வளம் பெற்று விவசாயம் செழித்து பயன் பெறுவர்.

மேலும் நான்குநேரி தொகுதிக்குட்பட்ட பாளை யூனியன் தருவை பஞ்.,சில் சுடுகாட்டுக்கு செல்லும் பாதையில் பாளையங்கால்வாய் குறுக்கே பாலம் மற்றும் சர்வீஸ் சாலை அமைத்து மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றி தர வேண்டும்.இவ்வாறு அவர் கலெக்டருக்கு அனுப்பியுள்ள மனுவில் தெரிவித்துள்ளார்.

## சம்பா சிறப்பு தொகுப்பு திட்ட செயல்விளக்க விழிப்புணர்வு

திருத்துறைப்பூண்டி: சம்பா சிறப்பு தொகுதி திட்ட செயல்விளக்க விழிப்புணர்வு முகாமில், வேளாண் பல்கலை துணைவேந்தர் ராமசாமி பங்கேற்று பேசினார்.
தமிழ்நாடு வேளாண் பல்கலை, மாவட்ட வேளாண் துறை, நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில், தமிழக முதல்வர் கூடுதல் சம்பா சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ், செயல்விளக்க விழிப்புணர்வு முகாம் திருத்துறைபூண்டியில் நடந்தது.
இதற்கு தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர் டாக்டர் ராமசாமி, மாவட்ட இணை இயக்குனர் மயில்வாகனன் தலைமை வகித்தார்.

செயல் விளக்கம் குறித்து, தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர் டாக்டர் ராமசாமி பேசியதாவது:

பி.பி.எம்., என்ற திரவ நுண்ணுயிர் கலவையை ஏக்கருக்கு, 200 மில்லி அல்லது, ஒரு சதவீதம் பொட்டஷ் கரைசலை, பல்வகை தெளிப்பான் கொண்டு தெளிப்பதால், பயிர்கள், பத்து முதல், 15 நாட்களுக்கு வறட்சியை தாங்கும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதில் எம்.எல்.ஏ., உலகநாதன், பஞ்சாயத்து யூனியன் தலைவர் வேதநாயகி, திருத்துறைப்பூண்டி வேளாண் உதவி இயக்குனர் நடேசன், வேளாண் அறிவியில் நிலையம் பேராசிரியர் ராஜேந்திரன், தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ஜெயராஜ் உட்பட பலர் பங்கேற்றனர்.

திருத்துறைப்பூண்டி தவிர, நுணாக்காடு பகுதியிலும் நேரடி செயல் விளக்கம் நடந்தது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

07.01.2013 A.M

## 15 மாவட்டத்தில் தோட்டக்கலை மாதிரி கிராமங்கள்



கோவை: கோவை உட்பட 15 மாவட்டத்தில் தோட்டக்கலை மாதிரி கிராமம் அமைக்கும் பணி துவங்கியுள்ளது. மழை பெய்வது குறைந்து விட்ட நிலையில், தமிழக அரசு தோட்டக்கலை பண்ணைகளுக்கு ஊக்கம் அளித்து வருகிறது. இதன்படி கோவை மாவட்டத்தில் முதல் கட்டமாக நரசீபுரம் கிராமத்தில் கடந்த மாதம் 100 ஹெக்டேரில் தோட்டக்கலைத் துறை சார்பில் தோட்ட கலை கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது. குறைந்த செலவில், குறைவான தண்ணீரில் பயிர் சாகுபடி செய்து அதிக லாபம் கிடைப்பதால் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். மாவட்ட அளவில் தோட்ட கலை பயிர் சாகுபடி பரப்பை மேலும் 20% அதிகரிக்க தேவையான முயற்சியை வேளாண் துறையினர் மேற்கொண்டுள்ளனர். வேளாண் துறையினர் கூறுகையில், ‘‘கோவை, ஈரோடு, நீலகிரி, திருவள் ளூர், சேலம், தர்மபுரி, வே லூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, பெரம்பலூர், தேனி, திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம் ஆகிய 15 மாவட்டங்களில் தோட்டக்கலை கிராமம் அமைக்க உத்தரவிடப்பட்டது. கோவையை தொடர்ந்து படிப்படியாக தோட்டகலை கிராமங்கள் அமைக்கப்பட உள்ளது. தே வையான மானியம் பெற்று தரப்படும். விலையும் கிடைக்கும். அனைத்து சீசன்களிலும் விலை கிடைக்கும்,‘‘ என்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

07.01.2013 A.M

## பருவமழை பொய்த்ததால் கருகும் தென்னை மரங்களை காப்பாற்ற போராடும் விவசாயிகள்

குடிமங்கலம்

பருவமழை பொய்த்ததால் கருகும் தென்னை மரங்களை காப்பாற்ற விவசாயிகள் போராடும் நிலை உள்ளது.

தென்னை விவசாயம்

தமிழகத்தில் சுமார் 3½ லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. இதில் திருப்பூர், கோவை மாவட்டங்களில் மட்டும் சுமார் 1½ லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் தென்னை விவசாயம் நடைபெற்று வருகிறது. உடுமலை வட்டார பகுதிகளில் கடந்த காலங்களில் பி.ஏ.பி. மற்றும் கிணற்று பாசனம் மூலம் தென்னை மரங்கள் சாகுபடி செய்யப்பட்டன.

பராமரிப்பு செலவு குறைவு என்பதோடு, நிரந்தர வருமானமும் கிடைத்து வந்ததால் விவசாயிகள் அதிக எண்ணிக்கையில் தென்னை மரங்களை நட்டு வளர்த்தனர். அப்போது பாசனத்துக்கு போதுமான தண்ணீர் கிடைத்தது. கிணறுகளிலும் அதிக அளவு தண்ணீர் இருந்ததால் பாத்திகளில் விட்டு நீர் பாய்ச்சினார்கள். அதோடு நிலத்தடி நீர்மட்டமும் அதிகமாக இருந்தது.

பருவ மழை இல்லை

எனவே தென்னை மரங்களுக்கு போதிய அளவு தண்ணீர் விட முடிந்தது. தென்னை மரங்களும் நன்கு செழித்து வளர்ந்தன. விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் நிரந்தரமாக நல்ல வருமானம் கிடைத்து வந்தது. தேங்காய் உற்பத்தியும் அமோகமாக நடைபெற்று வந்தது.

ஆனால் ஜூன் மாதம் தொடங்கும் தென்மேற்கு பருவமழை பெய்ய வில்லை. வடகிழக்கு பருவ மழை யும் விவசாயிகளுக்கு கை கொடுக்க வில்லை. போதிய அளவு மழை பெய்யாததால் அணை

உள்ளிட்ட நீர் நிலைகளில் நீர்மட்டம் குறைந்து விட்டது. எனவே ஆழ்துளை கிணறுகளில் தொடர்ந்து தண்ணீர் எடுப்பதால் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து விட்டது.

வருமானம் பெருக

எனவே தென்னை மரங்களுக்கு போதுமான தண்ணீர் விடமுடிய வில்லை. இதனால் பல ஆண்டுகளாக பலன் தந்த தென்னை மரங்கள் கருகும் நிலை ஏற்பட்டு உள்ளது. அதிக எண்ணிக்கையில் தேங்காய் காத்த தென்னை மரங்களில் கூட மகசூல் குறையத் தொடங்கி உள்ளது. எனவே தென்னை மரங்களை காப்பாற்ற விவசாயிகள் திணறி வருகின்றனர்.

மேலும் தென்னை மரங்களுக்கு தேவையான தண்ணீரை சொட்டுநீர் பாசன முறையில் கொடுத்து வரு கின்றனர். அது தென்னைமரத்துக்கு போதுமானது அல்ல என்பதால் தென்னை மரங்களை சுற்றிலும் எப்போதும் ஈரப்பதம் இருப்பதற்கு தேவையான தொழில்நுட்பங்களை பின்பற்றி வருகின்றனர். வறட் சிக்கு தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டு உள்ளதால் வருமானத்தை பெருக்க விவசாயிகள் ஊடு பயிர்சாகுபடி போன்றவற்றையும் கடைபிடிக்க தொடங்கி உள்ளனர்.

இது குறித்து குடிமங்கலம் பகுதி விவசாயி வெங்கடேசன் கூறியதாவது:–

சுழற்சிமுறை சாகுபடி

நிரந்தர வருமானம், பராமரிப்பு செலவு குறைவு என்பது உள்ளிட்ட காரணங்களால் தென்னை சாகுபடி செய்தோம். ஒரு ஏக்கருக்கு 75 முதல் 80 வரை தென்னை மரங்கள் நடலாம். தென்னை மரங்கள் நட்டு பல ஆண்டு ஆகி விட்டது. அப்போது அணைகளிலும், நிலத்தடியில் 150 முதல் 200 அடியிலும் தண்ணீர் கிடைத்தது. தென்னை மரத்துக்கு போதுமான அளவு தண்ணீர் விட முடிந்ததால் ஆண்டுக்கு 150 தேங்காய் கிடைத்தது. ஆனால் தற்போது தென்னை மரங்களுக்கு தண்ணீர் விட முடியாத நிலை உள்ளது. இதனால் ஆண்டுக்கு 50 காய்கள் காய்ப்பதே அரிதாகி விட்டது.

1000 அடி வரை ஆழ்துளை கிணறுகள் தோண்டியும் தண்ணீர் இல்லை. அதையும் மீறி தண்ணீர் கிடைத்தால் அது உப்புநீராக உள்ளது. அதை தென்னை மரங்களுக்கு பாய்ச்சினால் மகசூல் பாதிக்கும். எனவே தற்போது நல்ல மழை பெய்தால் கூட தென்னை மரங்கள் மகசூல் கொடுக்க 2 ஆண்டுகள் வரை ஆகும். எனவே தண்ணீர் மற்றும் வறட்சியை கருத்தில் கொண்டு தென்னையை மட்டும் விவசாயிகள் நம்பி இருப்பது நல்லதல்ல. எனவே சுழற்சிமுறை சாகுபடிக்கு விவசாயிகள் மாற வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது.

இவ்வாறு வெங்கடேசன் கூறினார்.

விலைக்கு தண்ணீர்

இது குறித்து விவசாயி கண்ணன் கூறுகையில், கடந்த காலங்களில் பி.ஏ.பி. திட்டம் மூலம் அதிக அளவு தண்ணீர் கிடைத்தது. இது தவிர கிணற்று பாசனம் மூலமும் தென்னைக்கு தண்ணீர் பாய்ச்சி வந்தோம். ஆனால் தற்போது தென்னை மரங்களை காப்பாற்ற தண்ணீரை விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை உள்ளது. ஆனால் போதிய தண்ணீர் விட முடியாததால் தென்னை மரங்கள் காய்ந்து வருகிறது. மேலும் விலை கொடுத்தாலும் தண்ணீர் கிடைக்காத பரிதாப நிலை உள்ளது. எனவே பல ஆண்டுகளாக பலன் கொடுத்து வந்த தென்னை மரங்கள் தண்ணீர் இன்றி கருகுவது வேதனை அளிக் கிறது என்றார்.

வறட்சியில் தென்னை மரங்களை பாதுகாப்பது குறித்து ஆழியார் தென்னை ஆராய்ச்சி மைய விஞ்ஞானி ராஜமாணிக்கம் கூறியதாவது:–

<u>வறட்சி தாங்கும் ரகம்</u>

வறட்சி காலங்களில் தென்னைக்கு சொட்டுநீர் பாசனம் மூலம் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். டேப் சிஸ்டம் மூலம் தண்ணீர் பாய்ச்ச கூடாது. தென்னை மரத்துக்கு மழை காலங்களில் நாள் ஒன்றுக்கு 45 லிட்டர் தண்ணீரும், குளிர்காலங்களில் 55 லிட்டர் தண்ணீரும், வெயில் காலங்களில் 65 லிட்டர் தண்ணீரும் பாய்ச்ச வேண்டும்.

எனவே வறட்சியை தாங்கி வளரக்கூடிய எ.எல்.ஆர்.சி.என். 2 ரக தென்னையை நடவு செய்ய வேண் டும். தென்னை மரத்துக்கு அடியில் அரைஅடி தோண்டி உரித்த தென்னை மட்டைகளை பதிக்க வேண்டும். தொடர்ந்து தண்ணீர் பாய்ச்சினால் அதை தென்னை மட்டைகள் உறிஞ்சி கொள்ளும். இதன் மூலம் வேர் பகுதியில் தொடர்ந்து ஈரப்பதம் இருந்து கொண்டே இருக்கும்.

<u>நல்ல மகசூல் பெறலாம்</u>

தென்னையில் இருந்து விழும் ஓலைகளை துண்டு துண்டாக வெட்டி தென்னை மரங்களை மூடாக்கு போடுவதன் மூலம் தென்னை மரங்களை பாதுகாக்கலாம். தென்னை மரத்தில் பணி செய்யும் வேர்கள் 2 மீட்டர் அகலமும், 1 மீட்டர் ஆழமும் இருக்கும். தென்னை மரத்தின் 4 இடங்களை தேர்வு செய்து 4 குழாய்களை பதித்து சுற்றிலும் மஞ்சு கழிவுகளை கொட்டி சொட்டுநீர் பாசனம் மூலம் தண்ணீர் விட வேண்டும். இதன் மூலம் தென்னை மரங்களை வறட்சியில் இருந்து பாதுகாக்கலாம். தொடர்ந்து நல்ல மகசூல் பெறலாம் என்றார்.